**வாக்குமூலம்**
**தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம், தென்காசி.**
**வழக்கு எண் : CC.No.41/2017**
**வழக்கு சாட்சி PW-8**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பத்மநாபபிள்ளை | தாலுகா | : | |
| தந்தை பெயர் | : | கோலப்பபிள்ளை | தொழில் | : | காவல் ஆய்வாளர் |
| கிராமம் | : | தச்சநல்லூர் | வயது | : | 55 |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central Act 44 of 1969) on the Wednesday of 10.06.2026.

**(எதிரி மற்றும் எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**முதல் விசாரணை :-**

நான் தச்சநல்லூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2016 வருடம் கடையநல்லூர் காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக இருந்த போது 19.08.2016 ம் தேதி காலை 8.00 மணிக்கு கடையநல்லூர் காவல் நிலைய குற்ற எண்.292/2016 வழக்கு கோப்பினை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டு சம்பவயிடமான கடையநல்லூர் தங்கல் மெடிக்கல் பக்கம் வைத்து சாட்சிகள் ஆறுமுகச்சாமி, விஸ்வநாதன் ஆகியோர் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபம் தயார் செய்தேன். அந்த வரைபடம் **அசாஆ.5** ஆகும்.

பின்னர் சாட்சிகள் ஆறுமுகச்சாமி, விஸ்வநாதன், கார்த்திக்ராஜா, சந்திரன், மாரித்துரை, மாரியம்மாள், விஜயகுமார் உதவி ஆய்வாளர் சில்வியாஜாஸ்மின் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 19.08.2016 ம் தேதி காலை 11.30 மணிக்கு திருநெல்வேலி அரசு மருத்துக்கல்லூரி மருத்துவமைனை சவக்கிடங்கில் வைத்து பஞ்சாயத்தார் முன்னிலையில் இறந்துபோன பாலகணேசன் என்பவரின்

பிரேதத்தின் மீது பிரேத விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை **அசாஆ.6** ஆகும். பின்னர் இறப்பிற்கான காரணம் அறியும் பொருட்டு பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்வதற்காக தலைமை காவலர் கோசுதுரை மூலமாக மருத்துவருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து பிரேதத்தை பிரேத பரிசோதனைக்கு அனுப்பி வைத்தேன்.

பின்னர் 30.08.2016 ம் தேதி 16.00 மணிக்கு எதிரியை காவல் நிலையத்தின் முன்பு வைத்து கைது செய்து தக்க பிணையில் விடுவித்தேன்.

பின்னர் 06.09.2016 ம் தேதி வழக்கில் சம்மந்தப்பட்ட TN 76 W 3576 என்ற பதிவெண் கொண்ட இருசக்கர வாகனத்தையும், TN 76 AE 0072 என்ற பதிவெண் கொண்ட லோடு ஆட்டோவையும் விபத்து ஆய்வு செய்யவேண்டி மோட்டார் வாகன ஆய்வாளருக்கு வேண்டுகோள் கடிதம் கொடுத்து ஆய்வுக்கு அனுப்பி வைத்தேன்.

அன்றைய தினமே வாகனங்களை ஆய்வு செய்த மோட்டார் வாகன ஆய்வாளர்கள் சசி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து மோட்டார் வாகன ஆய்வறிக்கைகள் பெற்றேன். அது **அசாஆ.7, அசாஆ.8** ஆகும். எதிரியை டிரைவராக நியமனம் செய்தது குறித்து வாகனத்தின் உரிமையாளர் அழகுபாண்டியன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

பிரேத பரிசோதனை செய்த மருத்துவர் ஸ்ரீதரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து பிரேத பரிசோதனை சான்று பெற்றேன். அந்த பிரேத பரிசோதனை சான்று **அசாஆ.9** ஆகும். பின்னர் தலைமை காவலர் கோசுதுரை என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அத்துடன் எனது விசாரணையை முடித்து சாட்சிகளின் வாக்குமூலத்தின்

அடிப்படையிலும், விசாரணையின் அடிப்படையிலும் எதிரி மீது சட்டப்பிரிவு 304(A) IPC வின் படி குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

சம்பவயிடம் போக்குவரத்து அதிகமாக உள்ள இடம் என்றால் சரிதான். சம்பவயிடத்தில் கூட்டம் அதிகமாக கூடியதாக அசா.1 என்னுடைய விசாரணையில் கூறவில்லை. அசா.2 சந்திரன், அசா.3 மாரித்துரை ஆகியோர்கள் சத்தம் கேட்டு சம்பவத்தை பார்த்ததாகவும், அப்போது பாலகணேசன் கீழே விழுந்து கிடந்ததாகவும் என்னுடைய விசாரணையில் கூறவில்லை என்றால் சரிதான். என்னுடைய விசாரணையில் அவர்கள் சம்பவத்தை கேள்விப்பட்ட சாட்சிகள் என்றால் அவர்கள் நேரில் பார்த்த சாட்சிகள் ஆவார்கள். காயம்பட்ட பாலகணேசன் எந்த வாகனத்தில் அரசு மருத்துவமனைக்கு சென்றார் என்று என்னுடைய விசாரணையில் துலங்கவில்லை. அசா.1 கார்த்திக் ராஜா அவரது கல்லூரியில் போட்டியில் கலந்து கொண்டு வந்ததாக என்னுடைய விசாரணையில் கூறியுள்ளார் என்றால் கல்லூரியில் இருந்து வந்ததாக கூறியுள்ளார். கடையநல்லூரில் புது பஸ் ஸ்டாண்ட் அடுத்து அரசு மருத்துவமனையும், பின்னர் கிருஷ்ணாபுரமும் 3 நிறுத்தங்கள் உள்ளது என்றால் புது பஸ் ஸ்டாண்ட் மற்றும் அரசு மருத்துவமனை அருகில் உள்ளது. மேலக்கடையநல்லூரில் வசிப்பதினால் புது பஸ் ஸ்டாண்டில் இறங்கவேண்டும் என்றால் சரியல்ல. இறந்தவருக்கு லைசன்ஸ் உள்ளதாக மோட்டார் வாகன ஆய்வாளர் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். எதிரியின் அஜாக்கிரதையினாலும், கவனக்குறைவினாலும் இந்த விபத்து ஏற்படவில்லை என்றால் சரியல்ல. இறந்துபோன நபர் அவருக்கு முன்னால் சென்ற வாகனத்தை ஓவர் டேக் செய்து வலது புறமாக எதிரே வந்த எதிரியின் வாகனத்தின் மீது மோதி இந்த விபத்தை ஏற்படுத்திக்கொண்டார் என்றால் சரியல்ல. அசா.1

கொடுத்த தவறான தகவலின் அடிப்படையில் வழக்கு பதிவு செய்து சாட்சிகளை சரிவர விசாரணைசெய்யாமல் ஒரு தலைப்பட்சமாக விசாரித்து குற்ற இறுதியறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை– இல்லை.

J CHRISTAL BABITHA

Digitally signed by J CHRISTAL BABITHA
Date: 2026.06.19 13:18:16 +0530